முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.10.2023**, சனிக்கிழமை

1. மறை போற்றும் மாதருமம்
   மண்ணுலகில் காத்து வழிநடத்தும்
   இறைபலம் கொண்ட அரங்கனே
   இணையிலா உன் தருமம் மெச்சி
2. மெச்சியே அறிவுரை ஆசி
   மேலான சோபகிருது துலை திங்கள்
   அச்சமிலா சதுர் திகதி காரி வாரம்
   (சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04 ம் நாள், 21.10.2023, சனிக்கிழமை)
   அறிவிப்பேன் சுந்தரமூர்த்தி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை வழிகாட்டி அரங்கன்
   ஞானமே கடைத்தேற்றும் வழியாகும்
   நம்பிக்கை வைத்து உலகோர் வர
4. வருகவே மக்களுக்கு மாற்றம்
   வரமாக அரங்கனால் கிட்டும்
   தருகின்ற வண்ணம் வசதிநிலை
   தருமகுணமும் பெருகி நிற்கும்
5. நிற்கவே எக்காலம் தனிலும்
   நிந்தனையான ஆணவமலம்
   பற்றிடா பாதுகாப்பும் கூடியே
   பண்பானவர்களாக நடக்க நேரும்
6. நேருமை கொண்ட போக்காக
   நிலவுலகம் எங்கிலும் மாற்றம்
   ஆறுமுக அரங்கனால் நடக்கும்
   ஆளுமையையே அசைக்கின்ற

7. அசைக்கின்ற மகா சக்தியாக
ஆன்மீக ஞானப் படைகளை
தேசமெங்கிலும் படைத்துமே
தேசிகனார் அவதாரம் வெற்றி காணும்

8. காணவே எல்லா வகையிலும்
கண்ணியம் மிக்க மக்களாய்
ஞானவான்கள் நிறைந்த வண்ணம்
நல்ல அதிகாரிகள் ஆளுபவர்களென

9. என எல்லாத் துறைகளும்
இயல்பான வண்ணம் சேவை
பணக்குறி இல்லா பண்பானவழி
பயபக்தியாக சேவை நடந்தேறும்

10. தேறுமே மக்களை நோக்கி
தேவரீர் ஞானிகள் ஆட்சியாக
மாறுதலும் ஞானத் தேர்தலும் கண்டு
மண்ணுலகம் ஞான ஆட்சிபெறும்

11. ஆட்சி பெறும் ஆறுமுகப்பெருமான்
ஆசிபட எங்கும் அற்புதம்
மாட்சிமைபட அரங்கேறும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–